சிவனருள் இதழ் 65, சூலை 2020

முனைவர் நாகப்பன் ஆறுமுகம்



# திருக்கோயில் எழக் காலம் கனிந்தது!

சைவத் திருக்கோயில் கலை கல்வி அறவாரியம் எழுப்பும் சைவத் திருக்கோயில் மற்றும் சைவக் கலைக் கல்லூரிப் பணிகள் ஆலவாய் அண்ணல் சொக்கநாதன் திருவருளால் முதற்படி ஏறியுள்ளது. ஏழரை ஏக்கர் நிலம் கையில் உள்ளது. திட்டத்தின் வரைபடங்கள் பட்டறிவு மிக்க வடிவமைப்புக் கலைஞரால் முழுமை பெற்றுள்ளன. நகரமைப்பு வல்லுநர்களால் பிற பணிகள் தொடங்கியுள்ளன. கட்டுமானப் பணிகள் தடையின்றி



அறவாரியத்தின் இணைய தள வடிவமைப்புப் பொறுப்பாளர்,
போர்ட்கிள்ளான் சைவ சமய மன்றம்

நடைபெறப் பெருமான் அருள்நிதியும தொண்டர்தம் பொருள் நிதியும் வேண்டும். அருள்நிதி உண்டு, பொருள் நிதி வேண்டும்!

## சித்தாந்த மாணவரே அடித்தளம்

சைவத் திருக்கோயிலுக்கும் சைவக் கலைக் கல்லூரிக்கும் அடித்தளம் ஆவோர் நமது சித்தாந்த மாணவரே. ஏனைய திருப்பணியாளரும் வரவேற்கப்படுகின்ற நிலையில் நமது சித்தாந்த மாணவர் தம் சொந்தப் பணியாகவே இத்திட்டம் வளர்ந்து நிறைவு பெற வேண்டும்.

## இணைய தளம்

சைவ அறவாரியத்திற்கு என இணைய தளம் ஒன்று வடிவமைக்கப்படுகின்றது. அத்தளத்தில் நமது திருப்பணிகள் குறித்த செய்திகள் அவ்வப்போது அறிவிக்கப்பெறும். மாணவர் உட்படச் சிவத்தொண்டர், சிவனடியார் அனைவரும் கொடையளித்து சிவபெருமான் திருவருளைப் பெறலாம். இணைய தளம் குறித்த அறிவிப்பு அற வாரியத்தின் முகப் பக்கத்தில் அறிவிக்கப்பெறும். திருப்பணிகள் குறித்த செய்திகளை நாடு முழுவதும் எடுத்துச் செல்லச் சித்தாந்த மாணவர் படை அணியமாக வேண்டும்.

## உலகப் பெருஞ்சமயம்

சைவ சமயம் இந்தியப் பெரு நிலம் முழுவதும் பரவியிருந்த பெருஞ்சமயம். இந்தியப் பெரு நிலத்திற்கு அப்பாலும் உலகெங்கும் சைவம் பரவியிருந்தமைக்குச் சான்றுகள் அவ்வப்போது வெளிப்பட்டு வருகின்றன. அகழ்வாராச்சிகளும் தொல்பொருள் அராய்ச்சிகளும் இதனை நிறுவி வருகின்றன. தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான திருக்கோயில்களில் சிவபெருமான் எழுந்தருளி இருந்தார். இன்றும் தமிழ்நாடு சைவத் திருக்கோயில்களின் கலைக்கூடமாக விளங்குகின்றது.

## அரசனும் மக்களும்

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களைத் தமிழ் மன்னர் முன்னின்று கட்டினர் என்றாலும் மக்கள் வழங்கிய வரியும் நிதியும் உடல் உழைப்பும்தாம் திருக்கோயில்கள் எழுவதற்கு அடித்தளமாய் இருந்தன. இன்று மன்னர் இல்லை, மக்கள் இருக்கிறோம். எனவே, திருக்கோயில் எழுப்பும் பணியில் மக்களும் சைவ அடியாரும்தாம் முன்னிற்க வேண்டும்.

## மேன்மை கொள்ள வேண்டும் சைவ நீதி!

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம் என்றனர் சைவ அடியார். ஆயிரத்துஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு சைவ நீதி உலகமெல்லாம் விளங்கியிருந்தது உண்மையே. இன்று இல்லை. உலகமெல்லாமல்ல, நம்மைச் சுற்றி நாம் வாழுகின்ற நாட்டிலாவது சைவ நீதி விளங்க வேண்டும். சிவனைப் போற்றுவார்க்கும் ஏனைய தமிழர் அனைவருக்கும் சிவன் ஓர் அடையாளம், பண்பாட்டுச் சின்னம். சிவனடியார்க்கு ஆன்ம நாயகன். எனவே, தமிழர், இந்தியர் அனைவருக்கும் இந்தத் திருக்கோயில் திட்டத்தில் இடம் உண்டு. சிறப்பாகச் சித்தாந்தம் பயிலும் மாணவர்க்கு அவர்தம் குடும்பத் திட்டம் இது!

## கலைக்கோயிலும் எழுகிறது!

அருள்மிகு சொக்கநாத பெருமான் திருக்கோயில் மட்டுமன்று சைவக் கலைக் கோயிலும் உடன் எழுகிறது. சித்தாந்தம் என்னும் தத்துவத் துறை, திருமுறை என்னும் பண்ணிசை, இரண்டுக்கும் உயிராக அமையும் தமிழ்த் துறை, இசைக் கருவி, எழில் நடனம் ஆகிய கலைகளுக்கும் தொடர்பியல், பொறியியல் போன்ற புத்தாக்கக் கல்விக்கும் உரிய கல்விக் கோயிலாகவும் கல்லூரி ஒன்று உடன் எழுகின்றது. இரண்டாயிரம் பேர் அமரத்தக்க அரங்கமும் மாணவர் தங்கு மனைகளும் பயிற்சிக் கூடங்களும் அமைகின்றன. தியான மண்டபம், தியானக் குடில்கள் இப்படி அனைத்தும் நறுஞ்சோலைகள் நடுவே அமைகின்றன. வழிபாட்டுக்கு மட்டுமல்ல, வாழ்க்கைக்கும் வழி காட்டும் கலை நகர் இது!

இப்படியொரு சைவக் கலை நகர் அமைவது சிவபெருமான் திருவுள்ளம். அவன் பணிக்கு உடன் இருப்பது அடியார் கடன். 'வாய்த்தது நுந்தமக்கு ஈதோர் பிறவி' மதித்திட வருவீர் எனச் சித்தாந்த மாணவர் அனைவரும் மகிழ்ந்து அழைக்கிறோம். வருக! சிவனருள் பெறுக!